


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்திலுள்ள திருமுட்டம் வருவாய் வட்டத்தைச் சார்ந்த 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து, அப்பகுதி உழவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட உத்தரவிட்டமைக்காக வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முன்னிலையில் காட்டுமன்னார்கோயில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் மற்றும் அப்பகுதி உழவர் பெருமக்கள் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.



சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று (28.11.2025) நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன், சிறப்பு அவைக்கூட்ட உறுப்பினர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சரும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான மு.பெ.சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி ச. வளர்மதி, தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சீ. சௌமியா, பதிவாளர் திருமதி பூமாலினி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் முத்துகுமார், பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

## தமிழ் இணையக் கல்விக்கழகம் சார்பில்

# தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் கணித்தமிழ் சொற்பொழிவு நிகழ்ச்சி!

சென்னை, நவ.29-

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2024-25 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது கணித்தமிழ் சார்ந்து தொடர் சொற்பொழிவுகள் மாதந்தோறும் நடத்தப்படும் என அறிவித்தார்.

இதனைச் செயல்படுத்தும் விதமாக தமிழ் இணையக் கல்விக்கழகம் மாதந்தோறும் துறைசார்ந்த அறிஞர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு கணித்தமிழ் தொடர்பான சொற்பொழிவுகளைக் கல்லூரிகளில் நடத்தி, அதனை அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயனடையும்வண்ணம் வலையொளிதளம் (YouTube) வழியே நேரலையில் ஒளிபரப்பு செய்துவருகிறது. முதல் கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 17.12.2024 அன்று எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் மதன் கார்க்கி செயற்கை நுண்ணறிவும் கலைகளும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.




தமிழ் இணையக் கல்விக்கழகம், தியாகராஜர் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து நடத்தும் ஏழாவது கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி மற்றும் கணித்தமிழ்ப் பேரவை தொடக்க விழா நேற்று 28.11.2025 மதுரை, தியாகராஜர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்துத் தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் நீச்சல்காரன் என்கிற இராஜாராமன் (மொழித் தொழில்நுட்ப வல்லுநர்) "தமிழ்ப் பெருமொழி மாதிரிகள் வாய்ப்புகளும் சவால்களும்" என்னும் தலைப்பில் உரையாற்றினார், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் திரு. ரெ. கோமகன் அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கவுரை வழங்கினார். தியகராஜர் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் அசோக்குமார் வரவேற்புரையும் புலத்தலைவர் முனைவர் பாலாஜி நன்றியுரையும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல், மின்னணுவியல் உள்ளிட்ட பல்துறை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## வடசென்னை நாடாளுமன்ற தொகுதி நிதியில்

# 46வது வட்டத்தில் ரூ.75 லட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி!

### திட்டப் பணியை டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தொடங்கி வைக்கிறார்!

சென்னை, நவ.29-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் மண்டலம் - 4, வார்டு - 46க்கு உட்பட்ட கல்யாணபுரம் குடிசை மாற்று குடியிருப்பில் ரூபாய். 75 லட்சங்கள் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியை இன்று (29.11.2025 - சனிக்கிழமை) காலை 11:30 மணிக்கு சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., முன்னிலையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி கணேசன், நிலைக்குழு உறுப்பினர் திருமதி.சர்வஜெயாதாஸ் நரேந்திரன், வட்டக் கழகச் செயலாளர்கள் முருகன், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஆனந்தி, தெற்குப் பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள் பங்கேற்று சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## பி.ஜெ. மூர்த்தி ஏற்பாட்டில் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில்

# பெரியபாளையத்தில் இளைஞர் எழுச்சி நாள் விழா!

### மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் பங்கேற்பு!

திருவள்ளூர், நவ. 29;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தலைமை செயற்குழு உறுப்பினரும் ஒன்றிய செயலாளர் பிஜெ.மூர்த்தி தலைமையில் அன்னதானம் வழங்கு நிகழ்ச்சி பெரியபாளையம் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு

கழகக் கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். தொடர்ந்து 1000 பேருக்கு இனிப்புடன் கூடிய அறுசுவை பிரியாணி வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏவி.ராமமூர்த்தி, பாசே. குணசேகரன், கே.எஸ்.மணி, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பி.என்.ரவிச்சந்திரன், சிவாஜி, சிவசங்கர், சண்முகம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி.பி ரவிக்குமார், சம்பத், எல்லாபுரம் ராஜேஷ், , முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சித்ரா முனுசாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.சீனிவாசன் இ.ராஜா, ஐ.ராஜா, அணி அமைப்பாளர் முகமது மொய்தீன், எஸ்.அமிர், மற்றும் நிர்வாகிகள் எஸ்.பாபு, சந்திரசேகர், பா.து. தமிழரசன், மா.தீபன், லோகேசன், அசோகன், முனுசாமி, சுப்பையா, ஏழுமலை. விமல்ராஜ், தினேஷ், அமீர், ஹரி, மூர்த்தி, ஜிடி எம்.கார்த்திக், ஆகியோர் உட்பட திரளான கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கவரைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தமிழக ஆதிவாசி அமைப்புகளின் கூட்டமைப்பு சார்பில் மாநில பொதுச் செயலாளர் எம்.குணசேகரன் எற்பாட்டில் கும்மிடிப்பூண்டி தொகுதியில் வசித்து வரும் 500க்கும் மேற்பட்ட இருளர் இன மக்களுக்கு வீட்டுமனை கோரி விண்ணப்பங்களை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். நிகழ்ச்சியில் தமிழக ஆதிவாசி அமைப்புகளின் மாவட்ட செயலாளர் முனுசாமி, துணைத்தலைவர் சந்திரன், பொருளாளர் மாரியம்மாள், சங்கர் கே.ஜி.நமச்சிவாயம், செங்கரை பெருமாள், கண்ணன்கோட்டை கோபால், அமுல்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதி, 86 வது வார்டு முழுவதும் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் SIR படிவத்தை ஆய்வு செய்தார் உடன் வட்டச் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் எம்.கமல், பாக நிலை முகவர்கள் நிர்மல் குமார், பிரபாவதி, சரவணன், சங்கர், ராணி, தினேஷ், மஞ்சுளா, ஜெயந்தி, மற்றும் பலர் இருந்தனர்.

## ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

# 113 (அ) வட்டச் செயலாளர் த.தேவராஜ் மணவிழா வரவேற்பு!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

சென்னை, நவ.29-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 113அ வட்டக் கழகச் செயலாளர் ந.தேவராஜ் அவர் களின் மகன் திருநிறைச்செல்வன் தே. சரத்குமார் திருநிறைச்செல்வி க. சுபாஷினி திருமண வரவேற்பு 30.11.2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணியளவில் சென்னை 17, தி.நகர், அபிபுல்லா சாலையில் அமைந்துள்ள பசும்பொன் தேவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அவர்கள் தலைமை வகிக்கிறார்.

இளையத் தலைவர் துணை முதலமைச்சர் கழக இளைஞார் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்தி பேசுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், கழக துணை பொதுச்செயலாளர் சென்னை மண்டல கழக தேர்தல் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ராசா மற்றும் கழக முன்னணியினர் மணமக்களை வாழ்த்துவார்கள். பகுதி செயலாளர்கள், மாவட்ட / மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள் / மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். டி.ஆர். சீனு நன்றியுரையாற்றுவார்.

## சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி நிதியில்

# சைதையில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனையில் புதிய கட்டிடம்!

### திட்டப்பணியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

சென்னை, நவ.29-

நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் 08.09.2025 அன்று ஆறு தளங்களுடன் கூடிய புதிய கட்டிடம் சுமார் ரூ.28.75 கோடி மதிப்பீட்டில் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்சமயம் புதிய கட்டிடத்தில் தரை தளத்தில் அவசர சிகிச்சை, முதல் தளத்தில் புற மருத்துவ பயனாளிகள் பிரிவும், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறாம் தளங்களில் இரத்த பகுப்பாய்வகம், உள் மருத்துவ பயனாளிகள் பிரிவு டயாலிசிஸ் பிரிவு, நான்கு அறுவை அரங்குகள், தற்சமயம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. தினமும் வெளிப்புற மருத்துவ பயனாளிகள் 1200க்கும் மேற்பட்டோர் பயன்பெறுகின்றனர். எலும்பு முறிவு அறுவை சிகிச்சைகள் மற்றும் 20,000 சுழற்சி டயாலிசிஸ் செய்து சிறப்பான சேவைகள் செய்யப்பட்டுள்ளது.

2018-19இல் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டடம் மற்றும் ஊடுகதிர் (X-ray) உபகரணங்கள் வழங்கி வருடத்திற்கு சுமார் 20,000 மருத்துவ பயனாளிகள் பயன்பெறும் வகையில் X-ray எடுக்கப்பட்டு வருகிறது. இன்று சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் 2,100 சதுர அடி பரப்பளவில் காத்திருப்போர் கூடம் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# 123வது வட்டத்தில் 25 பாகங்களில் கழக கொடியேற்றி நல உதவிகள்!

### வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில்

சென்னை, நவ.29-

கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 123-வது வட்டக் கழக செயலாளர் மு.இ. ஏழுமலை தலைமையில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட 25 பாகங்கள் தெருக்கள் வாரியாக கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கியும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மேற்கு பகுதி செயலாளர் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி முன்னிலை யில் 123-வது வட்ட கழகம் உட்பட்ட தெருக்களில் நடைபெற இருக்கின்றன.

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

சி.பி. ராமசாமி தெரு, டி.டி.கே.சாலை, திருவள்ளுவர் சாலை, வன்னியபுரம், பக்தவச்சலம் தெரு, பாரதியார் தெரு, அப்பாதுரை தெரு, வ.உ.சி. தெரு சந்திப்பு திருவள்ளூர் சாலை, சித்தம்மாள் ரோடு சந்திப்பு திருவள்ளூர் சாலை, எல்டாம்ஸ் ரோடு,

ராமலிங்கேஸ்வரர் கோவில் தெரு, காமராஜர் சாலை எல்.ராம்ஸ் ரோடு சந்திப்பு, ஜெகநாதன் தோட்டம் எல்லாம் ரோடு சந்திப்பு, பெரியார் சாலை, காமராஜர் 1-வது தெரு, காமராஜர் 2-வது தெரு, வெங்கட்ராமன் தெரு, பெரியார் சாலை வெங்கட்ராமன் தெரு சந்திப்பு, வெங்கட்ராமன் தெரு அன்பகம் எதிரில், பிமன்னா பிரதான சாலை 1-வது தெரு, பிமன்னா 2-வது தெரு, டாக்டர் ரங்கா ரோடு சந்திப்பு,

சென்மேரிஸ் ரோடு கால்வால்கரை சாலை சந்திப்பு, கால்வாய் கரை சாலை, கவிஞர் பாரதிதாசன் சாலை.

இதில் அனைத்து கழக நிர்வாகிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி வி. எம். முருகவேலுவின் இளையமகள் எம். முல்லைச்செல்வி (வயது 19) இயற்கையெய்திதையொட்டி மாவட்ட செயலாளர் அமைச்சர் பி. கே. சேகர்பாபு அன்னாரின் படத்தை திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, எஸ். இராஜசேகர், தேர்தல் பொறுப்பாளர் இரா. நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம். விஜயகுமார், மண்டல குழு தலைவர் பி. ஸ்ரீராமுலு எம். சி.மற்றும் வட்ட கழக செயலாளர்கள் பா. கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி. சதிஷ்குமார், எஸ். புகழேந்தி, த. கதிரவன்(எ) ராஜா, கே. கவியரசு மற்றும் நிர்வாகிகளும், கழகத்தினர் மலர் அஞ்சலி செலுத்தினர்.



இளைஞர் எழுச்சி நாள் விழா செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய நென்மேலி ஊராட்சியில் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய இளைஞரணி மற்றும் மாணவரணி சார்பில் திருக்கழுக்குன்றம் ஒன்றிய கவுன்சிலர், வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் மா. கடும்பாடி ஏற்பாட்டில் ரத்ததான முகாம் மற்றும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் தலைமை பொது குழு உறுப்பினரும், வடக்கு ஒன்றிய செயலருமான வீ. தமிழ்மணி முன்னிலையில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சேட்டு (எ) பரந்தாமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.